REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

விலை ரூபா 1-25

NEEM Agencies
32, A, Horton Place, Colombo 7
நீம்ஸ் ஏஜென்சீஸ்
32 A, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு-7
★ சிங்கப்பூரில் ★
பணிப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு. சிங்கப்பூருக்கு நேரில் சென்று உரிய வெற்றிடங்களுக்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.
விபரங்களுக்கு. உரிமையாளர்,
A, K. சிவஞானம்
171 A, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
L. L. No. 585, Ap. No. A/L 585/4/87

ஈழமுரசு
EELAMURASHU

NEEM Agencies
32, A, Horton Place, Colombo 7.
நீம்ஸ் ஏஜென்சீஸ்
32 A, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7.
★ சிங்கப்பூரில் ★
பணிப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உண்டு. சிங்கப்பூரில் நேரில் சென்று உரிய வெற்றிடங்களுக்கான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.
விபரங்களுக்கு, உரிமையாளர்:
A. K, சிவஞானம்
171 A, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
L. L No.585, Ap. No. A/L 585/4/87

முரசு 4 பிரபவ ஆடி மீ 12ஆம் உ செவ்வாய்க்கிழமை (28-7-1987) ஹீஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை - 1 முழக்கம் 174

# தமிழர் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தாத தீர்வு

# தமிழர் மீது திணிக்கப்படக்கூடாது என புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகளை மதிக்காத, அவர்களின் சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்தாத எந்தத்தீர்வும், தலைவர்மீதும் எம் மக்களின் மீதும் திணிக்கப்படக் கூடாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:

எம்மக்களின் எதிர்கால விடிவுக்கான இலட்சியப் போராட்டம் விடுதலைப் புலிகளினதும், தமிழ் மக்களினதும் அர்ப்பணிப்புக்களுடன் கூடிய தியாகங்களினால் ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது, இக்காலகட்டத்தில் எமது உரிமைப் போராட்டப் பாதையில் மீண்டும் ஒரு பேச்சு மேடைக்கு தமிழ் மக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

### எந்தத் தீர்வும் திணிக்கப்படலாகாது

தமிழ் மக்களின் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக எமது தலைவர் வே. பிரபாகரன் அழைக்கப்பட்டுள்ளார். இப்பேச்சுக்களின் போது தலைவர் மீதும், எம்மக்களின் மீதும், தமிழ் மக்களின் அபிலாசைகளை மதிக்காத அவர்களின் சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்தாத எந்தத் தீர்வும் திணிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

எங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண நாம் நடாத்துகின்ற எமது போராட்டத்தில் எல்லோரது மனிதாபிமான ஒத்துழைப்புக்களையும், உதவிகளையுமே வரவேற்கின்றோம். ஆனால் அடுத்தவர்களின் நலன்களுக்காக எமது போராட்டம் பயன்படுத்தப்படுவதை உறுதியாக நிராகரிக்கின்றோம். நாளைய சந்ததியினரின் நல்வாழ்வுக்காக சிந்தப்பட்ட இரத்தத்தையும் வியர்வையை

(4-ம் பக்கம் பார்க்க)

உதய சிந்தனை

படுகொலைகளால் பதம்பட்டது,
ஏதேச்ச திகாரம்.

— எர்னஸ்ட் முப்ஸ்டர்.

## இதயமுரசு

### சாம்பல் மேட்டில் சரணாகதியா?

"நியாயப்படுத்துவதற்கான காரணங்களிருந்தால் எந்த நிமிஷத்திலும் மாநில ஆளுநரை, முதலமைச்சரை, மாநில அமைச்சரவையை பதவி நீக்க என்னால் முடியும்" சிறிலங்காவின் அதி உத்தம ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

வடக்கையும் - கிழக்கையும் இணைத்து மாநிலசபை அமைக்கும் புதிய யோசனைகள் பற்றி புதுடில்லியில் இப்பொழுது போராளிக் குழுக்களுடன் இந்திய அரசு ஆராய்ந்து ஆலோசனை செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதிய யோசனைகளின் அடிப்படையில் புதன் கிழமை கொழும்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமென்று அதி உத்தமரும் சில அமைச்சர்களும் அடித்துக் கூறி வருகின்றனர்

ஆனால் இந்தப் புதிய யோசனைகள் பற்றிய விபரமோ ஒப்பந்த விபரமோ இதுவரை உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் இருந்தால் எக்கணத்திலும் தாம் நியமித்த மாநில ஆளுநரையோ, முதல் அமைச்சரையோ பதவி நீக்கம் செய்யமுடியுமென்றும், மாநில அமைச்சரவையைக் கலைக்க முடியுமென்றும் அதி உத்தம ஜனாதிபதி அறிவித்திருப்பது கடந்த கால அநுபவங்களைக்கொண்டு சிந்திக்கப்படவேண்டியது; ஆராயப்படவேண்டியது!

எந்தக் காரணத்தையும் காட்டி நியாயப்படுத்துவது

## மீண்டும் விசேட அடையாள அட்டை

(சுன்னாகம்)

வடமராட்சிப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசேட அடையாள அட்டை விநியோகப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன் தினம் தொடக்கம் இவ்விசேட அடையாள அட்டை வழங்கப்படுகின்றதாம். இந்த விசேட அடையாள அட்டை இன்றி வடமராட்சிப் பகுதியில் எவரும் நடமாடமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## "தமிழ் முஸ்லிம் பங்களிப்பை மறக்கக்கூடாது" - ஜே. ஆர்,

(கொழும்பு)

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் சுதந்திரப் போராட்டத்திலும் சிங்களவரை விட தமிழ், முஸ்லிம் மக்கள் அளப்பரிய பங்களிப்புச் செய்திருப்பதை மறந்துவிடக்கூடாது என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன சனிக்கிழமை ஒரு பொது வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

என்னால் அறிவிக்கப்பட்ட இனப் பிரச்சனைத் தீர்வுக்கான புதிய யோசனைகளின்படி, நான்

(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பு: இன்று விசேஷபதிப்பு!

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியிலுள்ள 4ஆம் கட்டை இராணுவ முகாம் நேற்று மாலை ஐந்தரை மணியளவில் போராளிகளால் தகர்க்கப்பட்டது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. இன்று நண்பகல் 'ஈழமுரசு' விசேஷ பதிப்பு வெளிவரும்.



# நாளை ராஜீவ் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் திருமதி சோனியாகாந்தியும் நாளை புதன் கிழமை கொழும்புக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்கின்றனர்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் கொழும்பு விஜயத்தை நேற்று மாலை புதுடில்லி உறுதிப்படுத்தியது. பிரதமர் ராஜீவ் தம்பதிகளின் கொழும்பு விஜயத்துக்கான ஏற்பாடுகளை இந்தியத் தூதரகத்துடன் சேர்ந்து சிறிலங்கா அரசு கவனிக்கிறது

பட்டுள்ள புதிய யோசனைகளை அடிப்படையாகக் கொண்ட சமரச ஒப்பந்தத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி கைச்சாத்திடுவார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

நேற்று முழுநாளும் புது

(4-ம் பக்கம் பார்க்க)

## சாம்பல் மேட்டில் சரணாகதியா?

“நியாயப்படுத்துவதற்கான காரணங்களிருந்தால் எந்த நிமிஷத்திலும் மாநில ஆளுநரை, முதலமைச்சரை, மாநில அமைச்சரவையை பதவி நீக்க என்னால் முடியும்”

சிறிலங்காவின் அதி உத்தம ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

வடக்கையும் - கிழக்கையும் இணைத்து மாநிலசபை அமைக்கும் புதிய யோசனைகள் பற்றி புதுடில்லியில் இப்பொழுது போராளிக் குழுக்களுடன் இந்திய அரசு ஆராய்ந்து ஆலோசனை செய்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதிய யோசனைகளின் அடிப்படையில் புதன் கிழமை கொழும்பில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமென்று அதி உத்தமரும் சில அமைச்சர்களும் அடித்துக் கூறி வருகின்றனர்.

ஆனால் இந்தப் புதிய யோசனைகள் பற்றிய விபரமோ ஒப்பந்த விபரமோ இதுவரை உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் இருந்தால் எக்கணத்திலும் தாம் நியமித்த மாநில ஆளுநரையோ, முதல் அமைச்சரையோ பதவி நீக்கம் செய்யமுடியுமென்றும், மாநில அமைச்சரவையைக் கலைக்க முடியுமென்றும் அதி உத்தம ஜனாதிபதி அறிவித்திருப்பது கடந்த கால அநுபவங்களைக்கொண்டு சிந்திக்கப்படவேண்டியது; ஆராயப்படவேண்டியது!

எந்தக் காரணத்தையும் காட்டி நியாயப்படுத்துவது அதி உத்தம ஜனாதிபதிக்குப் பெரிய காரியமல்ல!

அன்னை இந்திராவின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் கூட சர்வகட்சி என்றும் வட்டமேசை மாநாடு என்றும் இழுத்தடிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் 1977 ஆம் ஆண்டிலிருந்து 83 ஆம் ஆண்டு வரை ''பிரச்சனைக்குத் தீர்வு காண'' தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நடத்திய பேச்சுவார்த்தை இனக் கலவரத்தில் முடிந்தது.

திம்பு மாநாட்டின் பின் கூட்டணியினர் இனப்பிரச்சனைக்குச் சமர்ப்பித்த யோசனையின் மீது நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பட்ட கதி!

பின்னர் புதுடில்லி, பகாமாஸ், டாக்கா, பங்களூர் என்று நடந்த சந்திப்புக்கள், ஆலோசனைகள், திட்டங்கள், அவற்றிற்கான விளக்கங்கள், வியாக்கியானங்கள், திருத்தங்கள்-

இந்த நிலையில்தான் பிரதமர் ராஜீவ் காந்தியே தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாகப் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஒவ்வொருமுறையும் ஏமாற்றப்பட்டபோது அவர்கள் இழந்தவை அதிகம்.

அழிக்கப்பட்டவர்கள் போக எஞ்சியுள்ள தமிழ் மக்களையாவது காப்பாற்றுவதற்காக ஆயுதம் ஏந்திய இளைஞர் ஆயிரம் பேர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

பெற்றோரை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும் கணவனை இழந்த மனைவியும் மனைவியை இழந்த கணவனும் எல்லாவற்றுக்கும் மேலாக இழக்கக் கூடாததை இழந்த கன்னிப்பெண்களும், அங்கங்களை இழந்தவர்களும் சொத்துக்களையும், தொழிலையும், கல்வியையும் இழந்தவர்கள்

இவர்கள்தான் இன்று ஈழத்தில் எஞ்சியிருப்பவர்கள். இவர்களின் நிலம் கூடப் பறிக்கப்பட்டு இனறு அகதிகளாக அநாதைகளாக இருக்கின்றனர்.

புதிய யோசனைகளை முன்வைத்து போராளிகள் எழுபத்திரெண்டு மணிநேரத்தில் ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லும் சமயத்திலும்கூட கிழக்கு மாகாணத்தில் புதிதாக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஷெல் அடியும் துப்பாக்கி வேட்டுக்களும் வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் ஓயவில்லை

மாநில சபைத் தேர்தலில் கிழக்கிலிருந்து வெளியேறி அகதிகளாக வெளியிடங்களில் இருப்பவர்களும் வாக்களிக்க முடியுமென்றும் அதி உத்தமர் கூறியிருக்கிறார்.

கிழக்கில் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்கள் வெளி மாவட்டங்களிலிருக்கும் அதேசமயம் கடும் குற்றவாளிகளும் வெளியேறிய தமிழரின் இல்லங்களில் குடியேற்றப்பட்டிருக்கின்றனர்.

எல்லாவற்றையும் இழந்த நிலையில் நிற்கும் தமிழ் மக்கள் திக்குத் தெரியாமலிருக்கையில் தந்திரத்தில் கைதேர்ந்த அதி உத்தமரின் அரசின் சூழ்ச்சியில் விழுந்து தமிழ்ப் போராளிகளை புதிய யோசனைக்கு ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க முனைவது நியாயமாகாது.

சமாதானத்தின் பெயரால் ஒரு தேசிய இனம் தனது தனித்தன்மையை இழப்பதாக இருந்தால் இத்தனை இழப்புக்களும் தியாகங்களும் விழலுக்கிறைத்த நீராகிவிடுமே!

மைப் போராட்டப் பாதையில் மீண்டும் ஒரு பேச்சு மேடைக்கு தமிழ் மக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

### எந்தத் தீர்வும் திணிக்கப்படலாகாது

தமிழ் மக்களின் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக எமது தலைவர் வே. பிரபாகரன் ...

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசேட அடையாள அட்டை விநியோகப்பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் தொடக்கம் இவ்விசேட அடையாள அட்டை வழங்கப்படுகின்றதாம். இந்த விசேட அடையாள அட்டை இன்றி வடமராட்சிப் பகுதியில் எவரும் நடமாடமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.



... நேற்று மாலை இந்தியரை ... போராளிகளால் தகர்க்கப்பட்டது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன. இன்று நண்பகல் ‘ஈழமுரசு’ விசேஷ பதிப்பு வெளிவரும்.

# நாளை ராஜீவ் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் திருமதி சோனியாகாந்தியும் நாளை புதன் கிழமை கொழும்புக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்கின்றனர்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் கொழும்பு விஜயத்தை நேற்று மாலை புதுடில்லி உறுதிப் படுத்தியது. பிரதமர் ராஜீவ் தம்பதிகளின் கொழும்பு விஜயத்துக்கான ஏற்பாடுகளை இந்தியத் தூதரகத்துடன் சேர்ந்து சிறிலங்கா அரசு கவனிக்கிறது

இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமாக முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை அடிப்படையாகக் கொண்ட சமரச ஒப்பந்தத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி கைச்சாத்திடுவார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

நேற்று முழுநாளும் புது

(4-ம் பக்கம் பார்க்க)

## “தமிழ் முஸ்லிம் பங்களிப்பை மறக்கக்கூடாது” - ஜே. ஆர்,

(கொழும்பு)

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் சுதந்திரப் போராட்டத்திலும் சிங்களவரை விட தமிழ், முஸ்லிம் மக்கள் அளப்பரிய பங்களிப்புச் செய்திருப்பதை மறந்துவிடக்கூடாது என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன சனிக்கிழமை ஒரு பொது வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

என்றால் அறிவிக்கப்பட்ட இனப் பிரச்சனைத் தீர்வுக்கான புதிய யோசனைகளின்படி,நான்

(4-ம் பக்கம் பார்க்க)

★ டில்லியில் இரவிரவாக ராஜீவ் ஆலோசனை

# எம். ஜி. ஆர். வற்புறுத்தியும் புதிய யோசனைகளை பிரபா நிராகரித்தார்!

(சென்னை)

புதிய சமரசத் திட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்புடையதாகவில்லை எனவும் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்பதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் கூறி விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் புதிய சமரசத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார். இதனால் ஏற்பட்ட சிக்கல்களை நீக்குவதற்கு ராஜீவ் காந்தி விடிய விடிய ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழக முதலமைச்சர் எம் ஜி. ஆர். புதிய சமரசத் திட்டத்தை ஏற்கும்படி பிரபாகரனிடம் வற்புறுத்திய போதும் கூட பிரபாகரன் மேற்கூறப்பட்ட காரணங்களைக் காட்டி சமரசத் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார்,

இதனால் சமரச முயற்சிகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான வாய்ப்பு குறைந்து வருகின்றது. இச் சமரசத் திட்டத்தை ஏற்கச் செய்வதில் பிரதமர் ராஜீவ் காந்தி கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.

எம். ஜி. ஆரிடம் பிரபாகரன் தெரிவித்த கருத்துக்கள் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன. நேற்று நள்ளிரவுக்குப் பின்னும் நரசிம்மராவை அழைத்து இவ்விடயம் தொடர்பாக ராஜீவ் காந்தி பேசிக்கொண்டிருந்தார். இலங்கைக்கான இந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## நாளை இங்கு இந்திய உணவு

(சுன்னாகம்)

காங்கேசன்துறை பகுதி மக்களுக்கான இந்திய உதவி உணவுப்பொருட்கள் எதிர்வரும் 29-7-87 புதன் அன்று மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சௌத்ரி இந்தியா திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உணவு விநியோகம் சம்பந்தமாகத் தங்கியுள்ள இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர்க்குத் தலைவராக இருந்து வந்த திரு. சௌத்திரி நேற்று விமானமூலம் இந்தியா பயணமானார்

(4-ம் பக்கம் பார்க்க)

## “நயவஞ்சகத்தை இந்தியா புரிந்துகொள்ளவில்லை”

### இந்திய அரசியல் வட்டாரங்கள் கருத்து

(சென்னை)

இப்போது நடைபெறும் சமரசபேச்சு வார்த்தை இந்திய இலங்கை நலன்களை முன்னிட்டு நடப்பவையாக உள்ளன. விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கும் இலங்கை அரசின் நயவஞ்சகத் திட்டத்தை இந்திய அரசு புரிந்து கொள்ளவில்லை. இதனால் மீண்டும் ஒரு அரை குறைத் தீர்வை இந்திய அரசு தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்கின்றது. இதற்கு உதவியாக தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்களையும், பதவி ஆசைபிடித்து அலையும் கூட்டணியினரையும் கைப்பொம்மைகளாக பாவிக்க முயல்கின்றது. இக்கோரிக்கைகள்

(4-ம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

# கலைப்பதற்கு பொலிஸ் கண்ணீர்ப் புகை!

(அம்பாறை)

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் ஸ்ரீலங்கா அரசின் புதிய திட்டத்தினை எதிர்த்து நேற்று அம்பாறையில் புத்த பிக்குகள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. நூற்றுக்கணக்கான பிக்குகள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தினைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதாகவும் ரப்பர்க்குண்டுகளால் தாக்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பிலும் மற்ற இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு சில அரசியல் கட்சிகளும், புத்த பிக்குகளும்

(4-ம் பக்கம் பார்க்க)

★ சவூதி அரேபியா (JEDDHA)

(25 வயதிற்கு மேற்பட்டவர்கள்) American Company

★ Maintenance Cleaners Labourers ★

(பராமரிப்பு வேலையாட்கள்) 500 S.R

சாப்பாடு இருப்பிட வசதியுடன் August மாத முடிவுக்குள் பிரயாணம் தொடர இருக்கின்றது.

விபரங்களுக்கு:- அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

★ ஈராக்கிற்கு எம்மிடம் சில வெற்றிடங்கள் மட்டுந்தான் உண்டு. எல்லாவற்றிற்கும் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்

T. இந்திரநாதன்

கல்லூரி வீதி,
சோதி லேன்,
காங்கேசன்துறை.

96, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

B/2717

## 'நிதர்சனம்' குறும் பட பிரதிகளுக்கான போட்டி

நிதர்சனத்தால் நடத்தப்படும் இப்போட்டியில் தமிழீழத்தின் சகல மக்களும் கலந்து கொள்ளலாம்.

● போட்டிக்கான விதிகள்:-

1. பிரதிகளின் கருத்துக்கள் தமிழீழத்தின் சமகாலப் பிரச்சனைகளையும் போராட்ட சூழலையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.
2. குறும்படத்திற்கான தயாரிப்பதற்கான விதத்தில் இடபிரதிகள் எழுதப்பட வேண்டும்.
3. குறும்படம் 45 நிமி. நேரம் இருக்க வேண்டும்.
4. பிரதிகள் வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டதாகவோ முன்னர் பிரசுரிக்கப்பட்டதாகவோ, படமாக்கப்பட்டதாகவோ, தழுவலாகவோ இருக்கக் கூடாது.
5. சிறந்தாகத் தேர்ந்தெடுக்கப்படும் முதல் 3 பிரதிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
6. எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும் பிரதிகள் நிதர்சனம் மூலமாகப் படமாக்கப்படும்.
7. பிரதியை எழுதியவர் தானே தயாரிக்க விரும்பினுல் அதற்கான சகல வசதிகளையும் நிதர்சனம் செய்யும்.
8. ஏற்றுக் கொள்ளப்படும் பிரதிகள் சம்பந்தமான சகல உரிமைகளையும் நிதர்சனம் கொண்டிருக்கும்.
9. போட்டிக்கான முடிவு திகதி 1987-08-15 ஆகும்.
10. மேலதிக விபரங்கள் 'நிதர்சனம்' அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

– நிதர்சனம் –

'நிதர்சனம்'
அத்தியடி வீதி யாழ்ப்பாணம்.

# 10 மாதக் குழந்தை உட்பட குடும்பத்தைத் தாக்கியஷெல்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு ஷெல் தாக்குதலுக்கு பத்துமாதக் குழந்தை, ஒன்றரை வருடக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அச்சுவேலி விபேட்டி தியேட்டர் பக்கமாக இவர்கள் தமது வீடுகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே தொண்டமானாறு ஷெல் இவர்கள் அருகே வந்து வீழ்ந்து வெடித்தது.

குழந்தைகளைத் தூக்கிச் சென்ற திருமதி இராசகிளி (34 வயது), தனது குழந்தை தயாகரனுடன் (1 1/2 வயது) திருமதி தேவி (40 வயது) சந்திரகுமார் (10மாதம்)என்ற தனது குழந்தையுடன் மற்றும் செபஸ்ரியன் (40 வயது) ஆகியோர் காயமடைந்தவர்களாவர். (ச)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



படைப்பு 24-12-1960 — வீரமரணம் 15-06-1987

லெப். மதி

இராசையா சிறீபத்மநாதன்

தணியாத தாகமெடா தனியீழத் தாகமடா
துணிவாகச் சென்ருய் நீ, தாய் நாட்டின் துயர்
- துடைக்க
அணியாகச்— சென்றே யணிவகுத்து நின்ருயே
பணிப்புரைகள் கூறி— படையை வழி நடத்தினையே

விறல் மிகு வேங்கையாக வியத்தகு பணிபுரிந்து
திறமுடன் எதிரி தன்னைத் திகைப் புறவைத்
தாயையா
அற வழியில்லாப் போரில் அழித்தனன் ஆமியுன்னை
மறத் தமிழ் வீரன் நீயே மார்பினில் குண்டு
பெற்ருய்

— நண்பர்கள்

## வரி விளம்பரம்

ரேனியோ

★ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும்
★ தரமான ரேனியோ பிரதிகளையும் நவீன இயந்திரங்களின் உதவியுடனும
★ தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள விரையுங்கள். கிளீன்சட் 239, மின்சார நிலையவீதி யாழ்ப்பாணம்.

B/2700

To Dear St. Jude My greatful thanksforifavour granted publication as promised K M

R/1055

அதிவிரைவான பிரயாண ஒழுங்கு

அவுஸ்திரேலியா செல்ல விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் குழந்தைகளுடன் செல்லவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டாம்.

மேலும் விபரங்களுக்கு

K. SIVAHAMY
426/1 கே. கே. எஸ். ரோட்
(கின்னர் லேன்)
யாழ்ப்பாணம்.

B/2736

பிரயாண ஒழுங்குகள்

மாலைதீவு - சவுதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு தொழில் வாய்ப்புடன் போக உடன் தொடர்பு கொள்ளவும்,

K. T. V. SRINIVASHAN
Madathady Lane,
Off; Lawton Road,
MANIPAY.

LEO WALTER PATHALOMEZ
16-11/1, Baille Street.
COLOMBO — 1.
T. Phone: 540677.

B/2747

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பழுதடைந்த ரயர்கள் விற்பனை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பின் வரும் சாலைகளில் உள்ள பழுதடைந்த ரயர்கள் விற்

## 30-ம் நாள் நினைவஞ்சலி

28-6-87 அன்று மூதூரில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது

உயிர் துறந்த விடுதலைப்புலிகள்

வேலைகளையும் விரைவாகப் publications as precise ... 
பெற்றுக்கொள்ள விரையுங் R/1055

## அதிவிரைவான பிரயாண ஒழுங்கு

அவுஸ்திரேலியா செல்ல விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் குழந்தைகளுடன் செல்லவிரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டாம்.

மேலும் விபரங்களுக்கு

**K. SIVAHAMY**

426/1 கே. கே. எஸ். ரோட்
(கின்னர் லேன்)
யாழ்ப்பாணம்.

B/2736

## ...மாலைதீவு - சவுதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு தொழில் வாய்ப்புடன் போக உடன் தொடர்பு கொள்ளவும்,

**K. T. V. SRINIVASHAN**
Madathady Lane,
Off, Lawton Road,
MANIPAY.

**LEO WALTER PATHALOMEZ**
16-11/1, Baille Street.
COLOMBO — 1.
T. Phone: 540677.

B/2747

தணியாத தாகமெடா தனியீழத் தாகமடா
துணிவாகச் சென்றாய் நீ, தாய் நாட்டின் துயர்
- துடைக்க
அணியாகச்— சென்றே யணிவகுத்து நின்றாயே
பணிப்புரைகள் கூறி— படையை வழி நடத்தினையே

விறல் மிகு வேங்கையாக வியத்தகு பணிபுரிந்து
திறமுடன் எதிரி தன்னைத் திகைப் புறவைத்
தாயையா
அற வழியில்லாப் போரில் அழித்தனன் ஆமியுன்னை
மறத் தமிழ் வீரன் நீயே மார்பினில் குண்டு
பெற்றாய்

— நண்பர்கள்

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை
## பழுதடைந்த ரயர்கள் விற்பனை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பின் வரும் சாலைகளில் உள்ள பழுதடைந்த ரயர்கள் விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கோண்டாவில் | — | 600 எண் |
| பருத்தித்துறை | = | 16 எண் |
| காரைநகர் | — | 17 எண் |
| கிளிநொச்சி | — | 65 எண் |
| வவுனியா | — | 88 எண் |
| மன்னார் | — | 155 எண் |
| முலைத்தீவு | — | 08 எண் |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பப்பத்திரங்களை, 87-08-10ஆம திகதிக்கு முன்னர் தலைவர், கேள்விப்பத்திரச்சபை, வடபிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில் என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

ரயர்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரங்களில் அந்தந்த சாலை அதிபரின அனுமதியுடன் பார்வையிடலாம்.

சி. கனகரத்தினம்
தலைவர்/ தகவுடைஅதிகாரி
வட பிராந்திய போக்குவரத்துச் சபை
பலாலிவீதி,
கோண்டாவில்,

B2728

# 30-ம் நாள் நினைவஞ்சலி

28-6-87 அன்று மூதூரில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது உயிர் துறந்த விடுதலைப்புலிகள்



மேஜர் கஜேந்திரன்
(சிங்காரவேல் சசிதரன்)
திருகோணமலை



கப்டன் முத்துசாமி
(என். முரளீதரன்)
களுவாஞ்சிக்குடி



லெப். சுதர்சன்
(சிவகுருநாதன்)
ஆரையம்பதி



லெப். சிறி குளியா



இரண்டாம் லெப். கோபி
(ஆரையம்பதி)

தாவூர் நிமால்

லொயிட் சுரேன்

விதைகளாய் வீழ்ந்த
விடுதலைக் கருக்களே...
சுதந்திரம் பாடிய ..
இதந்தரும் குயில்களே...
கல்லறை உங்களால்
கருவறையானது...
கருவறை தகர்ந்தொரு
தலைமுறை பிறந்தது...

வேங்கையின் சுவடுகள்
வேகமாய்ப் பதிந்திட
நாங்களும் தொடர்ந்தனம்
நாங்களும் தொடர்ந்தனம்...

எங்களின் தாயக தாகம்
தணிந்திட....
எங்களின் பூமியில்
புதுயுகம் பிறந்திட
உங்களைத் தந்து நீர்
உயர்ந்தவராகினீர்
தங்கமாம் எங்கள்
தாயகம் மீதிலே...

## ஆகியோருக்கு எமது வீரவணக்கங்கள்

- நண்பர்கள்

# விக்னேடியூசன்சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**O/L** DAY (8 30 / 1-30) & EVENING 2-45 / 4 45 (புதிய பிரிவு)

ஆரம்பம்: **3.8.87**

**9, 8, 7, 6, 5**ஆம் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

B/2743

# போர் நிறுத்த முயற்சி ஒருபுறம்; மறுபுறம் ஈரான் - ஈராக் கடும் சண்டை; இருதரப்பிலும் பலத்த சேதம்

## நொடிப்பொழுதில் வளைகுடா செல்வதற்கு பிரெஞ்சு கடற்படை அதிரடிப்பிரிவு தயார்

(பாக்தாத்)

சர்வதேச அமைப்புகளும் வல்லரசுகளும் வளைகுடாப்பகுதியில் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் ஈரானுக்கும் - ஈராக்கிற்குமிடையில் கடும் சண்டை மூண்டுள்ளது.

ஈரானிய இராணுவ முகாம்கள்மீது பலத்த விமானத் தாக்குதல்களை தாம் மேற்கொண்டதாக ஈராக் அறிவித்துள்ள அதே வேளையில் மத்திய யுத்த முனையில் ஈராக்கிய துருப்புகளுக்கு பெரும்சேதம் விளைவிக்கப்பட்டதாக டெஹ்ரானிலிருந்து வெளியாகிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை முதல் ஈராக்கிய யுத்த விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் கடும் தாக்குதல் நடத்தின என்று பாக்தாத்திலுள்ளஇராணுவத்தலைமைப் பீடம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த அறிக்கையில் மத்திய யுத்த முனையில் ஏற்பட்ட யுத்தம்பற்றிய செய்திகள் எதையும்பாக்தாத் வெளியிடவில்லை.

ஞாயிற்றுக்கிழமை இரண்டு எல்லைப்புற பகுதியிலும் நடைபெற்ற கடும் சண்டையில் 1500 ஈராக்கிய படைவீரர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர் என ஈரானிய செய்தி ஸ்தாபனங்கள் அறிவித்துள்ளன.

பாக்தாத்திலிருந்து வடகிழக்கே 9 மைல் தூரத்தில் உள்ள சுமேர் என்ற இடத்தில் 2 வாரங்களுக்கு முன்னர் சண்டை மூண்டது. தைகிறேட் ஆற்றுப் பள்ளத்தாக்கின் மேற்குப்புறமுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மலைப்பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்வதில் இரு தரப்பாரும் முனைப்பாக ஈடுபட்டுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விமானத் தாக்குதலின் போது 50வாகனங்களும் பல தரைப்படை முகாம்களும் நிர்மூலமாக்கப்பட்டன என்று ஈராக்கிய அறிக்கை ஒன்று கூறுகின்றது.

பிரெஞ்சுக்கடற்படை அதிரடிப்பிரிவு தயார் நிலையில்

லெபனனில் உள்ள ஈரானிய சார்புக் கருத்துடையோர் தாம் தாக்குதல் நடத்தப்போவதாக, கருத்து வெளியிட்டதையடுத்து மூன்று பிரஞ்சுக் கப்பலும் ஒரு யுத்த விமானமும் வளை குடாப் பகுதிக்கு குறுகியகால அறிவித்தலின்கீழ் அனுப்பிவைக்கப்படத்தயாரான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் வளைகுடாப் போரை முடிவுக்குக்கொண்டு வர இயற்றப்பட்ட தீர்மானத்துக்கு வளைகுடாநாடுகள் ஆதரவு அளித்துள்ளன. அமெரிக்கா, சோவியத் நாடுகளும் வளைகுடாப்போரை சமாதானமாக்க முயற்சி மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில் இத் தாக்குதல் பெரும் சிக்கலை உருவாக்கியுள்ளது.

## விபத்தில்ஐவர்பலி

(திருச்சி)

தமிழ் நாட்டில் சூளூர்ப் பேட்டையிலுள்ள போலிரெட்டிப்பாலம் அருகில் ட்றக் ஒன்று வான் ஒன்றுடன் மோதியதில் 5 பேர் பலியானார்கள். 2 பேர் படுகாயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

## அரியலூரில் காலரா நால்வர் பலி

(சென்னை)

திருச்சிராப் பள்ளி மாவட்டம் அரியலூர் பகுதி முழுவதும் காலரா நோய்ப் பிரதேசமாக மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவித்துள்ளார். சமீபத்தில் 4 பேர் காலரா நோயால் இங்கு இறந்துள்ளனர். குடிநீரில் ஏற்பட்ட நச்சுத்தன்மையே இந்த நோய் பரவக் காரணம் என்று கூறப்படுகின்றது. இப்பகுதியில் உள்ள 27,000 மக்களில் 21 000 மக்களுக்கு காலரா நோய்த்தடுப்பு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. தற்போது 45பேர் இந்த நோய் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொது சுகாதார இயக்குநர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அரியலூருக்கு வருமாறும் வந்து நிலைமையை நேரில் கண்டறியுமாறும் கோரப்பட்டுள்ளார்.

## சுதந்திரப் போராட்ட வீரர் மறைவு

(மதுரை)

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தின்போது காந்தி ஆச்சிமத்தில் தொழு நோய்ப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த டாக்டர்ரங்கநாதன் ஞாயிற்றுக்கிழமை மதுரையில் காலமானார். அவருக்கு வயது 80. இவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் ஆகும். இவரது பூதஉடலுக்கு பெரும் திளான மக்கள்அஞ்சலி செலுத்தினர்.

## ராஜீவுக்கு 'அவலக் கோலங்கள்' திரைப்படப்பிரதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினரால் யாழ். குடாநாட்டில் இராணுவத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சம்பவங்களைத் தொகுத்து தயாரிக்கப்பட்ட 'அவலக் கோலங்கள், திரைப்படப் பிரதி ஆங்கில மொழி பெயர்ப்புடன் திரு. பூரி மூலமாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், இப்படத்தை ராஜீவ் டில்லியில் பார்த்ததாகவும் தெரியவருகிறது. இப்படத்தை சக்தி ஜெகநாதன் தயாரித்திருந்தார்

## நாடும் நடப்பும்

இனப்பிரச்சனையில் ஒரு சமாதான உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இந்தஅளவுக்கு வெற்றி கண்டவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயகா; மற்றவர் சென்னை 'இந்து' பத்திரிகையின் இணை ஆசிரியர் என். ராம்!

வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது என்று 1957ஆம் ஆண்டிலிருந்து நேற்றுவரை சூளுரைத்து வந்தவர் அதிஉத்தமர். இவரை நம்பித்தான் அத்துலத்முதலியும் சரி பிரதமர் பிரேமதாசாவும் சரி வடக்கும் கிழக்கும் இணையாது என்றபேச்சுக்கே இடமில்லையென்று முழங்கி வந்தனர்.

வளைந்து கொடுக்காத அதி உத்தமரையே வளையச் செய்தவர்கள் சாமானியமானவர்களா? ஒருவர் பத்திரிகையாளர் என்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்?

பாகிஸ்தான் உருவாகவேண்டும் இந்தியா பிரிக்கப்பட வேண்டுமென்று காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னு பிடிவாதமாக நின்றபோது ''இந்தியாவைப் பிளப்பதானால் முதலில் என்நெஞ்சைப் பிளவுங்கள்'' என்று காந்தி மகாத்மா கூறிக் கொண்டிருந்தார்.

பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுப்பதனால் ஏற்படக் கூடிய தீமைகளைவிட பிரித்துக் கொடுக்காமல் விடுவதால் ஏற்படக் கூடிய தீமை மிக அதிகமாகவே இருக்குமென்பதை சாணக்கியரான ராஜ ஜி எடுத்துக் கூறி பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு காநதிஜியை இணங்க வைத்தார்.

இங்கு இப்பொழுது வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஒப்புக்கொள்ளச் செய்வதில் காமினி திஸநாயகா வெற்றியீட்டியிருக்கிறார்.

இரண்டுமாகாணங்களையும் இணைக்காவிட்டால்நாடு பிரியும் என்று அதிஉத்தமரே கூறத்தொடங்கியிருக்கிறார்.

இந்நிலையில் சிறிமா அம்மையாரும் புத்தபிக்குகளும் சிறில் மத்தியூ குழுவினரும் இணைப்பை எதிர்ப்பது நல்லதே!

இப்பொழுதே கொழும்புப் பகுதியிலிருந்து தமிழ் மக்கள் பெருமளவில் வடக்கே வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி ஜே. ஆர். சொன்னது ஆயத்தமாகிறதோ!

ஊர்சுற்றி.

## ஆலயத்திற்குள் நுழைய தடை

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்திற்குள் அகதிகளாக யாரும் நுழையக் கூடாது என மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை தடைவிதித்து ஆலய வளவில் சுவரொட்டிகளை ஒட்டியிருக்கிறது. இராணுவ அடாவடித்தனங்களால் அல்லல்பட்டு தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய அகதிகள் ஆலய பரிபாலன சபையினரின் இத்தகைய அடாவடித்தனங்களால் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புகிறார்கள்.

## நிவாரண படிவங்களை ஏற்கவேண்டாமெனபணிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரச அதிபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் கோரும் படிவங்களை ஏற்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி வேதனையுறும் வடமராட்சி அகதிகளுக்கு அதிர்ச்சியையும், விசனத்தையும் அளித்துள்ளது. வடமராட்சிப்பகுதி மக்கள் அகதிகளாகத் தற்போது யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பகுதிகளிலும், உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களில் பலரும் நிவாரண உணவுப் பொருட்களைப் பெறவுமில்லை. வடமராட்சி அகதிகள் நிரந்தரமாகத் தங்குவதற்கு இடமின்றி வெவ்வேறிடங்களுக்கு அலைந்து தங்கி வருவதால் நிவாரணம் கோரும் படிவங்களை ஒப்படைக்கும் இறுதித்திகதி பற்றியோ, வேறுவிபரங்களையோ அறியமுடியாத நிலையில் புதிய அறிவிப்பு பரிதாப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண வானொலியின் அறிவிப்பை நம்பி வடமராட்சிக்குத் திரும்பிய சிலர்கூட அங்கு இராணுவம் பொது மக்களின் வீடுகளில் குடி கொண்டுள்ளதை தொடர்ந்து

## தாமு கலை அரங்கை தாயார் திறந்து வைத்தார்

(அச்சுவேலி)

அமரர் தாமுகந்தையா கலையரங்கத்தை கந்தையாவின் தாயார் புத்தூரில் திறந்து வைத்தார்.

1983 வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட தாமு கந்தையாவை கௌரவிக்கும் நோக்குடன் புத்தூர் கிழக்கு மகாத்மாஜி சனசமூக நிலையம் 50 ஆயிரம் ரூபா செலவில் கலையரங்கத்தை நிறுவியது.

நாடகக் கலையரங்கத்தை ஞாயிற்றுக்கிழமை இரவு தாமு கந்தையாவின் தாயார் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

கலையரங்கத் திறப்பு விழாவையடுத்து பல நாடகங்கள், வில்ப்பாட்டுக்கள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## நானே ஆண்டாள்

## ★ ★ கண்டதும் கேட்டதும் ★ ★

# வல்லையிலிருந்து...

# வல்லிபுரம் வரை...

ஏதோ ஒரு அசம்பாவிதம் விரைவில் நடக்க இருப்பதை மே மாதத்தின் முதல் வாரத்திலேயே நாம் உணரத் தலைப்பட்டுவிட்டோம்.

நள்ளிரவு நேரத்தில் வடமராட்சியின் மீது மர்மமான விமான ரோந்து, அதனை மேலும் நம்பிக்கையுறச் செய்தது.

வடமராட்சியின் உள்ளே... என்ன நடக்கிறது...? என்ன நடந்தது?

பொலிகண்டிக் கிராமம்... கந்தவனம் என்கின்ற கந்தசுவாமி கோவிலை மையமாக்க கொண்ட பரந்த பிரதேசம்

தெற்கே வல்வெட்டித்துறை வடக்கே பருத்தித்துறை... கிழக்கே... பாக்கு

அட்டகாசத்தையும் கடற்பீரங்கித் தாக்குதலையும் அனுபவித்தவர்கள்.

வீடுகளையும் தொழில்களையும் இழந்தவர்கள்.

மெல்லிருளில் நடக்கத் தலைப்பட்டார்கள்.

கிழடு கட்டைகள் குழந்தைகள் தாய்மார்கள் தாய்மையுற்றவர்கள் இளை

## வாசகர் கடிதம்

## ஆலயத்திற்குள் நுழைய தடை

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்திற்குள் அகதிகளாக யாரும் நுழையக் கூடாது என மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை தடைவிதித்து ஆலய வளவில் சுவரொட்டிகளை ஒட்டியிருக்கிறது. இராணுவ அடாவடித்தனங்களால் அல்லல்பட்டு தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய அகதிகள் ஆலய பரிபாலன சபையினரின் இத்தகைய அடாவடித்தனங்களால் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புகிறார்கள்.

## நிவாரண படிவங்களை ஏற்கவேண்டாமெனபணிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரச அதிபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் கோரும் படிவங்களை ஏற்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி வேதனையுறும் வடமராட்சி அகதிகளுக்கு அதிர்ச்சியையும், விசனத்தையும் அளித்துள்ளது. வடமராட்சிப்பகுதி மக்கள் அகதிகளாகத் தற்போது யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பகுதிகளிலும், உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களில் பலரும் நிவாரண உணவுப் பொருட்களைப் பெறவுமில்லை. வடமராட்சி அகதிகள் நிரந்தரமாகத் தங்குவதற்கு இடமின்றி வெவ்வேறிடங்களுக்கு அலைந்து தங்கி வருவதால் நிவாரணம் கோரும் படிவங்களை ஒப்படைக்கும் இறுதித்திகதி பற்றியோ, வேறுவிபரங்களையோ அறியமுடியாத நிலையில் புதிய அறிவிப்பு பரிதாப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண வானொலியின் அறிவிப்பை நம்பி வடமராட்சிக்குத் திரும்பிய சிலர்கூட அங்கு இராணுவம் பொது மக்களின் வீடுகளில் குடிகொண்டுள்ளதை தொடர்ந்து மீண்டும் அகதிகளாகத் திரும்பி வருகின்றனர்.

ஆனால் வடமராட்சி அகதிகளின் அவலநிலையைக் கவனத்திற் கொள்ளாது நிவாரண உதவி கோரும் படிவங்களை ஏற்க மறுப்பது வடமராட்சி அகதிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் கவனிப்பாரா என்று அவலநிலையில் வாழும் வடமராட்சி அகதிகள் கேட்கின்றனர்.

## [illegible] தாயார் திறந்து வைத்தார்

(அச்சுவேலி)

அமரர் தாமுகந்தையா கலையரங்கத்தை கந்தையாவின் தாயார் புத்தூரில் திறந்து வைத்தார்.

1983 வெலிக்கடையில் படுகொலை செய்யப்பட்ட தாமு கந்தையாவை கௌரவிக்கும் நோக்குடன் புத்தூர் கிழக்கு மகாத்மாஜி சனசமூக நிலையம் 50 ஆயிரம் ரூபா செலவில் கலையரங்கத்தை நிறுவியது.

நாடகக் கலையரங்கத்தை ஞாயிற்றுக்கிழமை இரவு தாமு கந்தையாவின் தாயார் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

கலையரங்கத் திறப்பு விழாவையடுத்து பல நாடகங்கள், வில்ப்பாட்டுக்கள், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## நாளை ஆண்டாள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ வரதராஜப் பெருமாள்கோயிலில் நாளை புதன்கிழமை முற்பகல் ஆடிப் பூர திருவிழா நடைபெறும். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஸ்ரீ ஆண்டாளுக்கு காலை ஒன்பது மணியளவில் விசேஷ அபிஷேகமும் விசேஷ பூஜையும் நடைபெறும்.

## ★ ★ கண்டதும் கேட்டதும் ★ ★

# வல்லையிலிருந்து... வல்லிபுரம் வரை...

ஏதோ ஒரு அசம்பாவிதம் விரைவில் நடக்க இருப்பதை மே மாதத்தின் முதல் வாரத்திலேயே நாம் உணரத் தலைப்பட்டு விட்டோம்.

நள்ளிரவு நேரத்தில் வடமராட்சியின் மீது மர்மமான விமான ரோந்து, அதனை மேலும் நம்பிக்கையுறச் செய்தது.

வடமராட்சியின் உள்ளே... என்ன நடக்கிறது...? என்ன நடந்தது?

பொலிகண்டிக் கிராமம்... கந்தவனம் என்கின்ற கந்தசுவாமி கோவிலை மையமாக்க கொண்ட பரந்த பிரதேசம்

தெற்கே வல்வெட்டித்துறை வடக்கே பருத்தித்துறை... கிழக்கே... பாக்கு

அட்டகாசத்தையும் கடற் பீரங்கித் தாக்குதலையும் அனுபவித்தவர்கள்.

வீடுகளையும் தொழில்களையும் இழந்தவர்கள்.

மெல்லிருளில் நடக்கத் தலைப்பட்டார்கள்.

கிழடு கட்டைகள் குழந்தைகள் தாய்மார்கள் தாய்மையுற்றவர்கள் இளைஞர்கள்... இளம் பெண்கள்... சிறுவர்கள்... சிறுமிகள்...

இவர்களது நடைப்பயணம்... பகல் நேரங்களில் பல தடவைகளில் நடந்ததுண்டு. 1984 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி முதன் முதல் அவர்கள் வீட்டை விட்டு ஓடத் தொடங்கினார்கள்...

அன்றையதினம்... பொலிகண்டி ஆலடிக்கு நேரே கடற்கரையில் இறங்க எத்தனித்த கடற்படையினரை அங்கு நின்ற விடுதலைப்போராளிகள் இழப்புகளுடன் விரட்டி அடித்த அன்றைய மாலையில் காரைநகரில் இருந்து வந்த கடற்படைப் பீரங்கிக் கப்பல்கள் தரையை நோக்கி வீசியடித்த அந்த குண்டோசையுடன் தான் அவர்களது இடப்பெயர்வு ஆரம்பமாயிற்று.

அவர்கள் இருளையும் கிழித்து இரவோடு இரவாக நடந்தார்கள்... கொற்றாவத்தைக்குள் நுழைந்து... உடுப்பிட்டி... பக்கமாக செல்வது அவர்களது நோக்கம்.

> டிசம்-19 கருத்தரங்கில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி நாளை வெளிவரும்.

### அகதிகளுடன் இன்னொரு அகதி

விரைந்து செல்லும் ஹெலியும், கடற்படைப் பீரங்கிக் கப்பலின் நடமாட்டமும் எம்மை சிந்திக்கச்செய்தனவே தவிர அச்சமுறச் செய்யவில்லை. சகல இராணுவ முகாம்களிலும் இராணுவம் சிறை பட்டிருந்த அந்தச் சூழ்நிலையில் எமக்கு எந்தவித மனத்தளர்வும் ஏற்பட நியாயமிருக்கவில்லை.

மே 24ஆம் திகதி இரவு யாழ். தளபதி லெப்.கேர்ணல் ராதாவின் பூதவுடல் கடற்கரை வீதியூடாக அஞ்சலிக்காக நகர்ந்த அந்த நேரத்தில்... தொலை தூரம் பருத்தித்துறை இராணுவ முகாமைப் பாதுகாக்க நின்ற பாரிய கடற்படைக் கப்பலும் மெல்ல நகர்ந்து... வல்வெட்டித்துறைக் கடற் பரப்பில் நிலை கொண்டது.

மே 25ஆம் திகதி...

வடமராட்சியின் மே மாதத்தைய முந்தைய நாட்கள் போலவே கழிந்தது.

அச்சுவேலி, ஆவரங்கால், வதராவத்தை, மட்டுவில், சரசாலை, வரணி, மணற்காடு, குடத்தனை மக்கள் 26ஆம் திகதி அதிகாலையில் சில விஷயங்களை அவதானித்தார்கள்.

தொலை தூரம் பரவை வெளியிலும், காடுகளிலும் இராணுவத் தும்பி இறங்கி ஏறியது. வடமராட்சியில் இலங்கை அரசின் ஒப்பரேசன் லிபரேசன் ஆரம்பமாகிவிட்டது.

வடமராட்சிக்கு வெளியே வாழும் மக்கள் குண்டு ஓசையையும், விமான, பொம்பர் நடமாட்டத்தையும் பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நீரிணை...

விவசாயிகளுடன் கடல் விவசாயிகளான மீனவர்களும் கலந்து வாழும் பிரதேசம்.

பனைமரங்களும் குச்சொழுங்கைகளும் ஒற்றையடிப் பாதைகளும் சின்னஞ்சிறு கோவில்களும் கொண்ட யாழ்ப்பாணத்தின் ஒரு பிரதேசத்தின் ஒரு சராசரிக் கிராமம்.

ம. மரிய கொறிற்ரு, பிறேஸ்மலர் என்கிற இரண்டு இளம் பெண்களின் அன்றைய காலை பீதியுடன் விடிந்தது. சரமாரியான ஷெல்லடி குண்டு வீச்சு. அவர்கள் தங்கள் குடும்பத்துடன் வீட்டில் பதுங்கிக் கிடந்தார்கள். என்ன செய்வது? அழுகை பசி பயம் ஆயினும் ஏதோ

### - நந்தினி சேவியர் -

ஒரு நம்பிக்கை.

பகல் பொழுது கழிந்தது. விட்டுவிடாமல் தொடரும் குண்டுச் சத்தங்கள்; கடற்படைப் பீரங்கித் தாக்குதல்கள்.

ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். வீட்டை விட்டு பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயர வேண்டும்.

ஷெல்லடி நிற்கவில்லை. ஹெலி அடி நிற்கவில்லை கிராமத்து மக்கள் இரவு நேரம் இடம் பெயரவேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

இந்த இடம், இடப்பெயர்வு அவர்களுக்கு பழக்கமான ஒன்று

அவர்கள் கடற்கரைவாசிகள். கடல்வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள். பலதடவைகளில் இராணுவ

நாலாபுறமும் தாக்குதல்... மேலே நகரமுடியாது ஒருவாறு நவுண்டில் பக்கமாக நகர்ந்தார்கள்... இவர்களுடன் சேர்ந்து மொத்தம் அறுபது உறுப்பினர்கள்... அழுகை; சிலர் துணிவுடன் இவர்களை அழைத்துச் சென்று ஒரு கோவிலுக்குள் தஞ்சம் புகுந்தார்கள்...

இதன் தொடர்ச்சி நாளை மறுதினம்)

## வாசகர் கடிதம்

### அம்மையாரின் சர்வதேசீய நியாய நிதானம்

அண்மையில் சிறிமாவோ அம்மையார் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஓர் நிதானமான அறைகூவலை விடுத்திருந்தார். அதி உத்தமரின் ஜனநாயக ஆட்சியில் தேர்தல் ஒன்று நடைபெற்றால் சர்வதேச நிபுணர் குழுவின் மேற்பார்வையின் கீழ்தான் நடைபெறவேண்டும் என்பது தான் அது. ஒட்டுமொத்தமாக அதிஉத்தமரின் ஆட்சியில் எல்லாம் சர்வதேசப் பங்காளிகள்தான் காரியம் நடத்த வேண்டிய அளவிற்கு இலங்கை தள்ளப்பட்டு வருவதை சிறிமான் பொதுஜனங்கள் அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் நன்கு அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது.

யாழ். அரசினர் வைத்திய சாலையை மூடுவதற்கு ஆட்சியாளர் எடுத்த அதிதீவிர முடிவிற்கு விடுதலைப் போராளிகள் ஓர் மனிதாபிமான வேண்டுகோளை முன்வைத்தனர். அது என்னவெனில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளின் மேற்பார்வையின் கீழ் அதாவது அவர்களது அவதானிப்பில் இருசாராரும் சமாந்தகார நிலைப்பாட்டில் தத்தமதுயுத்தநடவடிக்கையை கையாளவேண்டுமென்று இந்த மனிதாபிமான வேண்டுகோளை நிதானமான நியாயமெனக் கருதாத தர்மிஷ்ட தவயோகிகள அம்மையாரின் ஆர்ப்பரித்த அறைகூவலை ஏற்றுக் கொள்வார்களா? ஆயினும் அம்மையார் அவர்களின் அரசியல் ஞானம், காலத்திற்குக் காலம் மங்கியும் பொங்கியும்வருவதை மக்கள் ஓரளவு அறிந்துகொள்ளாமலில்லை அதி உத்தம அரசியல் மேதை ஜே. ஆர். அவர்களுக்கு அம்மையார் அவர்கள் ஞானம் கற்பிக்க முயல்வதை அதிஉத்தமர் ஏற்கனவே அறியாதவரல்ல. இருந்தும் அவரது உறுதியான நிலைப்பாடு, இப்படியாகத்தான் அமையவேண்டுமென்ற அந்தரங்கநோக்கை, காலத்திற்கு காலம், அம்மையார் அவர்கள் மக்களுக்கு நினைவுறுத்தி வருவதையும நாம் கருத்தில் கொள்ளாமலில்லை. ஆயினும், இலங்கை நாட்டின் அரசியல் நியாயங்கள் அனைத்தும் சர்வதேசப் பார்வையின் கீழ் தான் நடைபெற வேண்டுமென்ற, தேசபற்றற்ற அராஜகம் நிறைந்த ஆட்சிநெறிகளை அவதானிக்க சர்வதேச நிபுணர்குழு அவசியம் வேண்டும் என்பது, அம்மையார் அவர்களின் நியாயமான நிதானம் தானா என்பதின் கருத்தின் தொனி, இன்று எமது நாட்டில் நிலவும் அதி பயங்கர இனவெறியாட்டத்தின் உண்மையின் சொரூபத்தை, உலக மக்கள் நன்கு தெரியக்கூடிய, எந்தவித மறைப்புமின்றி கூறியிருப்பதை நாம் கூர்மையாக அவதானிக்க முடிகின்றது. ஓரளவில் சிங்கள மக்கள் சரியான நியாயத்தை நிதானப்படுத்த முன்வருவார்களானால் அது அவர்கள் தம் நாட்டிற்கு செய்யும் அளப்பரிய சேவையாகும்.

தமிழ் மக்களின் கொலை நியாயம் தானா, என்பதை மனித நேயத்துடன் அம்மையார் அவர்கள் அணுகினால், ஏன் சர்வதேச குழுக்கள் இங்கு வரவேண்டு மென்பது நன்கு விளங்கும்.

இ. வரதராசன்
(ஆனைக்கோட்டை)

## முதலாந் தேதி தொடக்கம் பஸ் நிலையம் இயங்கும்

### வர்த்தகர்களும் திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையம் ஆகஸ்ட் மாதம் முதலாந் திகதியிலிருந்து செயல்படும் எனத் தெரிய வருகிறது.

யாழ். பஸ் நிலையத்தில் உள்ள எரிபொருள் தாங்கிகளில் பஸ்களுக்குத் தேவையான எரிபொருட்கள் நிரப்பப்பட்டுள்ளன.

பஸ்கள் பஸ் நிலையத்திலிருந்து முதலாந் திகதி தொடக்கம் சேவையிலீடுபடும்.

இதே சமயம் யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள கடைகளும், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வாத்தக நிலையங்களும், நவீன சந்தையில் உள்ள கடைகளும் ஓரளவு திறக்கப்பட்டுள்ளன.

தத்தமது வீடுகளுக்குப் பொருட்களை எடுத்துச் சென்ற வர்த்தகர்கள் சிலர் திரும்பவும் கடைகளில் பொருட்களை இறக்குவதில் ஈடுபட்டுள்ளனர். (ச)

## காத்தான்குடியில் ஊர்காவல்படை கொலை

காத்தான்குடியில் ஊர்காவல்படையைச் சேர்ந்த மீரா முகைதீன் அப்துல் மஜீத் என்பவர் (27வயது) கடந்த வெள்ளிக்கிழமை இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டார். அவர் வீட்டில் இருந்த சமயம் இச்சம்பவம் நடைபெற்றது.

## வடக்கை இழப்போம்

### அரச எம். பி.

தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்ந்து நீடித்தால் நாம் விரைவில் வடமாகாணத்தை இழந்து விடுவோம். வடக்கில் தீவிரவாதிகளை அடக்க எம்மிடம் படைபலம் இல்லை. இதைவிட எமக்கு பொருளாதார உதவி செய்ய வெளிநாடுகளும் தயார் இல்லை.

மேற்கண்டவாறு அவசர கால நிலை நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எகலியகொட எம். பி. கலாநிதி விமல் விக்கிரமசிங்கா குறிப்பிட்டார்.

## சமையல்காரர்கள் தேவை

சைவ, அசைவ உணவு தயாரிப்பில் நன்கு அனுபவமுள்ள சமையல்காரர்கள் உடனடியாகத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஹோட்டல் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:

அபிராமி ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலிச் சந்தி



28 - 07 - 1987 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

EELAMURASHU



## சமையல்காரர்கள் தேவை

சைவ, அசைவ உணவு தயாரிப்பில் நன்கு அனுபவமுள்ள சமையல்காரர்கள் உடனடியாகத் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஹோட்டல் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:

அபிராமி ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலிச் சந்தி


# போலியோவுக்கு இரு குழந்தைகள் யாழ். குடாநாட்டில் பலி!

### மீண்டும் பரவும் இந்நோயைத் தடுக்க யோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் தற்பொழுது போலியோ நோய் தீவிரமாகப் பரவிவருகின்றது. ஆறு மாதம் முதல் நான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளே இந் நோயினால் கூடுதலாகப் பீடிக்கப்பட்டுள்ளனர். இந் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இரணைதீவு, நாச்சிக்குடா, ஆனைக்கோட்டை, சுதுமலை, திருநெல்வேலி பகுதியை சேர்ந்தவர்கள் ஆவர்.

சுமார் 10 பேர் யாழ் வைத்தியசாலையில் மிகவும் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் நேற்று முன்தினம் சுதுமலையைச் சேர்ந்த ஒரே குடும்பத்து பிள்ளைகளான நந்தகுமார் சூரியகுமார் (3) நந்தகுமார் சாமினி (1 1/2) ஆகிய இரு குழந்தைகள் ஆஸ்பத்திரியில் மரணித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் உள்ள மக்கள் இந்நோயின் தாக்கத்தை குறைப்பதற்கு இதற்கான தடை ஊசிகளை தவறாது உரிய நேரத்தில் பாவிக்குமாறும் இந்நோய் தொடர்பாக சகல சிறு குழந்தைகளின் பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்கும் படியும் யாழ் போதனா வைத்தியசாலை அதிபர் டாக்டர் நச்சினார்க்கினியர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அபாயகரமான குழந்தைகளின் பட்டியல் வருமாறு:- செல்வராஜா பிரதீபன் - 11 மாதம் ஆனைக்கோட்டை, முடியப்பு பிரேமலதா- 1 வயது இரணைதீவு, மரியதாஸ் சிலுவைராசா- 10 மாதம் இரணைதீவு, நீக்கிலஸ் ஞேஜினி- 4 வயது நாச்சிக்குடா, டோறஸ் றேகன்- 2 வயது இரணைதீவு, சிதம்பரநாதன் சுதர்சினி-4 1/2 வயது திருநெல்வேலி, பிரகாஸ் மேரி சுயாமலா-5 வயது இரணைதீவு, ஸ்ரீபன் மேரி சுலோசனா-1 1/2 வயது இரணைதீவு


## தமிழகத்தின் பார்வையில்....

நேற்றைய 'மாலைமுரசு'

### "ஜயவர்த்தனாவை நம்பவே முடியாது" - கிட்டு

(சென்னை)

"தன்னைப் பலப் படுத்திக் கொள்வதற்காக சில சமரசத் திட்டங்களை ஜெயவர்த்தனா அறிவிப்பார். பின்னர் திடீரெனத் தாக்குதல் நடாத்துவார்.



திட்டம நிறைவேறுவதற்கு யார்மீதும் பழிபோட்டு விடுவார். தமிழ்ப்பகும் மக்களுக்கும் எங்களுக்கும் ஜெயவர்த்தனாமீது நம்பிக்கை இல்லை. ஜெயவர்த்தனாவை நம்பவே முடியாது" இவ்வாறு தளபதி கிட்டு தெரிவித்துள்ளார்.

தளபதி கிட்டு மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் பிரேமதாசா ஜெயவர்த்தனாவின் எதிரி. ஜெயவர்த்தனாவுக்கு எதிரான சதித் திட்டங்கள் தயாராக இருக்கின்றன. ஒவ்வொரு கணமும் அவர் உசாராக இருப்பதனால் இதுவரை இவற்றிலிருந்து தப்பித்து வந்திருக்கிறார். ஜெயவர்த்தனா பதவி கவிழ்க்கப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஜெயவர்த்தனா ஏதாவது சமரசத் திட்டத்தினை அறிவிப்பதானால் பிரேமதாசா தலைநகரில் இல்லாத நேரம் பார்த்துத்தான் அறிவிப்பார். இவ்வாறு தளபதி கிட்டு கூறினார்.

### "பிரபாகரனின் வாளை சிறி கோத்தா முன் தொங்க வைப்பேன்" - ஜனாதிபதி ஜே. ஆர்.

### "ஆளுநர் முதலமைச்சரை பதவி நீக்கவும் முடியும்"

(கொழும்பு)

"தீவிரவாதிகள் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிக்குள் தம்மிடம் உள்ள ஆயுதங்களை என்னிடம் அல்லது நான் நியமிக்கும் ஒருவரிடம் ஒப்படைப்பார்கள். இந்த ஆயுதங்களில் பிரபாகரனின் வாள் ஒன்றும் அடங்கும். அந்த வாளை நானே எடுத்துவந்து சிறிகோத்தாவில் உள்ள முன்மண்டப வாசலில் தூக்குவேன்".

மேற்கண்டவாறு சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று முன்தினம் ஐ. தே. கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். ஜனாதிபதியின் இந்த உரையைக் கேட்டதும் கூடியிருந்தோர் பலத்த கரகோஷம் செய்தனர்.

ஜனாதிபதி மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

"அமைச்சர் தேவநாயகமும் பிரதியமைச்சர் அப்துல் மஜீத்தும் தனது ஆதரவாளர்கள் ஒரு வருடத்தின்பின்னர் கிழக்கில் நடாத்தப்படும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின்போது வடக்கு - கிழக்கு இணைப்புக்குஎதிராகவாக்களிப்பார்கள் என்று எனக்கு உறுதிமொழி தந்துள்ளார்கள். வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சபைக்கு ஒரு கவர்னர் இருப்பார். அவரை நானே நியமிப்பேன். யாராவது கவர்னராக நியமனம் பெற விரும்பினால் அதற்கான விண்ணப்பத்தை எனக்கு அனுப்பிவைக்கலாம்."

ஜனாதிபதி மேலும் பேசுகையில் "நான் நினைத்தால் தேவை ஏற்படின் மாநில கவர்னரை, முதல் அமைச்சரை, மாநில மந்திரி சபையை, மாநிலசபையை நினைத்த மாத்திரத்தில் கலைப்பதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது.

திருகோணமலையின் துறைமுகம் அதன் சுற்றாடல் பகுதியும் எமது மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். எமது ஐ. தே. கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் அடுத்த கூட்டம் வடக்கில் அல்லது கிழக்கில்தான் நடக்கும் என நம்புகிறேன்."

### கொள்ளையர்கைது

(யாழ்ப்பாணம்)

பரந்தனில் கடந்தவாரம் 11 முகமூடிக் கொள்ளைக்காரர்களை அவ்வூர் மக்கள் பிடித்து குமரபுரம் கிராம சேவையாளர் ஊடாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதகாலமாக கிளிநொச்சிப் பகுதியில் பல கொள்ளைகள், மானபங்கம் செய்துவந்த இக் கொள்ளைக்காரர்களில் ஒருவரை பரந்தன் மக்கள் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்த சமயம் இவரிடமிருந்து பல தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன இவர்கள் மூலம் ஏனையவர்களில் 10 பேரையும் பிடித்து விசாரித்த சமயம் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் புதைத்து வைக்கப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது இவர்கள் பாவித்த முகமூடிகளும் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் மக்கள் விசாரித்த போது தங்கள் கோஷ்டியில் 60 பேர் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட நகைகளுடன் இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களால் கெடுக்கப்பட்ட இரு பெண்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை ஆரியகுளம் சந்தியில் கடை ஒன்றில் தேனீர் அருந்திக் கொண்டிருந்த ஒருவர் திடீரென மயக்கமுற்று மரணமானார்.

அவர் தச்சுவேலை செய்யும் புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை மாரிமுத்து (49) என அவரது 381500128V அடையாள அட்டையிலிருந்து தெரிய வந்துள்ளது. இவரது சடலம் தற்பொழுது வைத்தியசாலை பிரேதஅறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்திற்கு உரியவர்கள் யாழ். வைத்தியசாலை பொலிசாருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### நேற்றைய தினமணி

### ராஜீவின் கோரிக்கைமீது எம்.ஜி.ஆர். பிரபாவுடன் பேசினார்

(சென்னை)

இனப்பிரச்சினை தீர்வுக்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்வைத்துள்ள புதிய யோசனைகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கேட்டுக்கொண்டதன் பேரில் ஞாயிறன்று புதுடில்லியில், திரு. பிரபாகரனுடனும், அவரது சகாக்களுடனும் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் பேச்சுவார்த்தை நடத்தினார்

ஈழப் போராளிகளின் கோரிக்கைகளை ஓரளவாவது ஏற்கும் வகையில் புதிய சமரசத் திட்டத்தை வழங்கும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை கேட்டிருந்தார்.

(...)ஷித் மூலம் ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளார்.

பேச்சுவார்த்தை சம்பந்தமாக நிருபர்கள் கேட்டபொழுது, அது குறித்து தங்களுக்கு கருத்துவேறுபாடுகள் இருப்பதாகவும், அதுதொடர்பாக விளக்கம் கோரி இருப்பதாகவும் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

புதிய சமரசத்திட்டம் இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் கூறிய சந்தேகங்கள் குறித்து விளக்கம் பெற இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்ஷித்தும், பூரியும்

### அம்பாறையில்

திட்டமிட்டிருப்பதையொட்டி கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி ஜயவர்த்தனா உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

### நயவஞ்சகத்தை

மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே இருப்பதால் விடுதலைப் புலிகள் இக்கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர்.

### நாளை ராஜீவ்

டில்லியில் போராளிக் குழுக்களுக்கும் இந்திய அரசு அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஷித் நேற்று மாலை கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி ஜயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்.

நேற்றுக் காலை சிறிலங்கா அமைச்சரவையின் விசேஷ கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் பிரேமதாசாவும் கலந்துகொண்டார்.

திரு ராஜீவுக்கு ஜனாதிபதி ஜயவர்த்தனா விருந்தளித்து உபசரிப்பார். ஜனாதிபதியும், பாரியாரும் விடுத்த

ஒரு கைதிக்கு ஒரு போராளி அடிப்படையில்

## கைதிகள் பரிமாற்றத்துக்கு

நேற்றைய தினமணி

# ராஜீவின் கோரிக்கைமீது எம்.ஜி.ஆர். பிரபாவுடன் பேசினார்

(சென்னை)

இனப்பிரச்சினை தீர்வுக்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்வைத்துள்ள புதிய யோசனைகளை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கேட்டுக்கொண்டதன் பேரில் ஞாயிறன்று புதுடில்லியில், திரு. பிரபாகரனுடனும், அவரது சகாக்களுடனும் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் பேச்சுவார்த்தை நடத்தினார்

ஈழப் போராளிகளின் கோரிக்கைகளை ஓரளவாவது ஏற்கும் வகையில் புதிய சமரசத் திட்டத்தை வழங்கும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை கேட்டிருந்தார்.

அதன்பேரில், வடக்கு, கிழக்கு இணைப்பதான புதிய யோசனையை இலங்கைக்கான இந்தியத்தூதர் ஜே. என். டிக்ஷித் மூலம் ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளார்.

பேச்சுவார்த்தை சம்பந்தமாக நிருபர்கள் கேட்டபொழுது, அது குறித்து தங்களுக்கு கருத்துவேறுபாடுகள் இருப்பதாகவும், அதுதொடர்பாக விளக்கம் கோரி இருப்பதாகவும் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

புதிய சமரசத்திட்டம் இன்னும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் கூறிய சந்தேகங்கள் குறித்து விளக்கம் பெற இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்ஷித்தும், பூரியும் பின்னர் எம். ஜி. ராமச்சந்திரனுடன் பேசியதாக யு.என்.ஐ. செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

(கொழும்பு)

''தீவிரவாதிகள் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிக்குள் தம்மிடம் உள்ள ஆயுதங்களை என்னிடம் அல்லது நான் நியமிக்கும் ஒருவரிடம் ஒப்படைப்பார்கள். இந்த ஆயுதங்களில் பிரபாகரனின் வாள் ஒன்றும் அடங்கும். அந்த வாளை நானே எடுத்துவந்து சிறிகோத்தாவில் உள்ள முன்மண்டப வாசலில் தூக்குவேன்''.

மேற்கண்டவாறு சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று முன்தினம் ஐ. தே. கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். ஜனாதிபதியின் இந்த உரையைக் கேட்டதும் கூடி...ஷம் செய்தனர்.

ஜனாதிபதி மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

''அமைச்சர் தேவநாயகமும் பிரதியமைச்சர் அப்துல் மஜீத்தும் தனது ஆதரவாளர்கள் ஒரு வருடத்தின்பின்னர் கிழக்கில் நடாத்தப்படும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின்போது வடக்கு - கிழக்கு இணைப்புக்குஎதிராகவாக்களிப்பார்கள் என்று எனக்கு உறுதிமொழி தந்துள்ளார்கள். வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சபைக்கு ஒரு கவர்னர் இருப்பார். அவரை நானே நியமிப்பேன். யாராவது கவர்னராக நியமனம் பெற விரும்பி...தை எனக்கு அனுப்பிவைக்கலாம்.''

ஜனாதிபதி மேலும் பேசுகையில் ''நான் நினைத்தால் தேவை ஏற்படின் மாநில கவர்னரை, முதல் அமைச்சரை, மாநில மந்திரி சபையை, மாநிலசபையை நினைத்த மாத்திரத்தில் கலைப்பதற்கு எனக்கு அதிகாரம் இருக்கிறது.

திருகோணமலையின் துறைமுகம் அதன் சுற்றுடல் பகுதியும் எமது மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். எமது ஐ. தே. கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் அடுத்த கூட்டம் வடக்கில் அல்லது கிழக்கில்தான் நடக்கும் என நம்புகிறேன்.''

முற்று மரணமானார்.

அவர் தச்சுவேலை செய்யும் புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை மாரிமுத்து (49) என அவரது 381500128V அடையாள அட்டையிலிருந்து தெரிய வந்துள்ளது. இவரது சடலம் தற்பொழுது வைத்தியசாலை பிரேதஅறையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்திற்கு உரியவர்கள் யாழ். வைத்தியசாலை பொலிசாருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## அம்பாறையில்

திட்டமிட்டிருப்பதையொட்டி கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி ஜயவர்த்தனா உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

## நயவஞ்சகத்தை

மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே இருப்பதால் விடுதலைப் புலிகள் இக்கோரிக்கைகளை நிராகரித்துள்ளனர்.

இத்தகவல்களை இந்தியாவிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழ் முஸ்லிம்

வடக்கையும், கிழக்கையும்தமிழர்களுக்கு தாரை வார்த்து கொடுக்கப் போவதாகவும் நான் சிங்கள மக்களுக்கு பெரும் துரோகமிழைக்க இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாகவும் என்னைப் பலரும் குறை கூறுகின்றனர் எமது நாட்டில் சமீபகாலமாக ஏற்பட்டு வரும் செயல்கள் தொடரவேண்டுமென்று யாராவது விரும்புவார்களா? என்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கேள்வி எழுப்பியுள்ளார்.

எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு ; சுதந்திரப் போராட்டத்திலும் சிங்களவரை விட தமிழ் முஸ்லிம் மக்கள் அளப்பரிய பங்களிப்புச் செய்திருப்பதை நாம் மறந்து விடக்கூடாதென்றும், இதைவிடச் சிறந்த தீர்வு காணமுடியுமென்று நான் கருதவில்லைஎன்றும் இதைவிட்டால் மாற்றுவழி இராணுவத் தீர்வுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

## சௌத்திரி

இவரின் பொறுப்புக்களை திரு. வேணுகோபால் ஏற்று நடத்துவாரா எனத்தெரிகிறது. திரு. வேணுகோபாலும் அண்மையில் இந்தியா சென்று திரும்பி வந்துள்ளார்.

இதேசமயம் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மூன்று புதிய செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் நேற்று யாழ்பாணம் வந்துள்ளனர். இவர்கள் மூவரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்

டுள்ளனர். இவர்களால் கெடுக்கப்பட்ட இரு பெண்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## நாளை ராஜீவ்

டில்லியில் போராளிக் குழுக்களுக்கும் இந்திய அரசு அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஷித் நேற்று மாலை கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி ஜயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசினார்.

நேற்றுக் காலை சிறிலங்கா அமைச்சரவையின் விசேஷ கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் பிரேமதாசாவும் கலந்துகொண்டார்.

திரு ராஜீவுக்கு ஜனாதிபதி ஜயவர்த்தனா விருந்தளித்து உபசரிப்பார். ஜனாதிபதியும், பாரியாரும் விடுத்த அழைப்பை ஏற்று திரு. ராஜீவ் தனது பாரியார் சோனியாவுடன் கொழும்பு வந்து வியாழக்கிழமை டில்லி திரும்பிவிடுவார்.

## தெற்கில் குழப்பம் செய்தால் கடும் நடவடிக்கை

நேற்று தொடக்கம் நாட்டின் தென்பகுதியில் வன்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி நேற்றுக் கூடிய தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் முக்கூட்டு தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு வழங்கியுள்ளார்.

இது தொடர்பான உத்தரவுகளில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், சந்தேகத்துக்கு இடமாக கூட்டமாக நிற்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு விதிகளை மீறுவோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் படியும் உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

**வடக்கிலிருந்து 2,500 இராணுவம் கொழும்பில் கடமை!**

நேற்று முன்தினம் யாழ் குடாநாட்டிலிருந்து அவசர கடமையின் பொருட்டு 2,500 இராணுவ, பொலிஸ் அதிரடிபபடைப் பிரிவினர் மூன்று கப்பல்களில் ஹாபர் வியூ ஹோட்டல் இராணுவ முகாமிலிருந்து கொழும்பு போய்ச்சேர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இராணுவ தலைமை அலுவலகத்தின் அவசர உத்தரவைத் தொடர்ந்து இவர்கள் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அங்கு விசேட கடமைக்காக நேற்று முதல் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு கைதிக்கு ஒரு போராளி அடிப்படையில்

# கைதிகள் பரிமாற்றத்துக்கு அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரையும், பொலிஸாரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டமொன்றில் கப்டன் ஜயந்தா கொத்தலாவல, லெப்டினன்ட் அஜித் சந்திரசிறி ஆகியோருக்கு அரசின் முடிவுகள் தேசிய பந்தோபஸ்து அமைச்சரால் விளக்கப்பட்டதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது.

இது குறித்து அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன:

(1) விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஒவ்வொரு படை வீரருக்கும் பதிலாக சிறையிலுள்ள ஒவ்வொரு போராளிகளை விடுதலை செய்தல்.

(2) இப்பரிமாற்றம் யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு அண்மையில் இடம்பெறும் சிறையிலுள்ள போராளிகள் விமான மூலம் கொண்டுவரப்படுவர்.

(3) முப்பத்தியாறு மணி நேரத்துக்குள் இப் பரிமாற்றம் இடம்பெறும்.

(4) சிறையிலிருப்போர் குறித்த அரசின் பட்டியல் கிடைத்ததும் விடுதலை செய்யக் கோருவோரின் பட்டியலை விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ் அடிப்படையில் இவ் விடயத்தைமுடிவுக்குகொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு ஏற்பட்டால் அரசு சார்பாக படையினரை மீட்பதற்கு கப்டன் கொத்தலாவலையும், லெப்டினன்ட் அஜித் சந்திரசிறியும் பிரசன்னமாவார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## எம். ஜி. ஆர்.

யத் தூதுவர் டிக்ஷித் கூறிய கருத்துக்கள் குறித்தும் பிரதமர் ராஜீவ் காந்தியும் நரசிம்மராவும் ஆலோசனை நடத்தினார்கள் நேற்று அதிகாலை வரை இவ் ஆலோசனை நடந்தது. சமரச முயற்சிகளில் ஒத்துழைப்பதற்காக எம்.ஜி ஆர். டில்லியில் தங்கியுள்ளார்.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் ''மாலைமுரசு'' நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. இதே கருத்து நேற்றைய ''வெரித்தாஸ்'' வானொலிச் செய்தியிலும் ஒலிபரப்பானது.

## தமிழர் சுதந்திர

யும் அடுத்தவர்கள் பயன்படுத்திச் சீரழிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது.

எம்மை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள முடியாத ஸ்ரீலங்கா அரசு இப்பேச்சுவார்த்தையெனும் கபட நாடகத்தின் மூலம் எம்மை நிராயுதபாணியாக்கி அடிமைப்படுத்தும் முயற்சியைத் தீவிரமாக்கி உள்ளது.

இதேவேளை தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட பதவி மோகங்கொண்ட சில சக்திகள் தமது சொந்த லாபங்களுக்காக எம்மக்களைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான போலிகளையும், அர்த்தமற்ற தீர்வுகளையும் நிராகரித்து தமிழீழ மக்களின் நிரந்தர விடிவுக்கான எமது இறுதி இலட்சியத்தை அடையும்வரை உறுதியுடன் போராடுவோம்.

நேற்றைய தினத்தந்தி

# வீரமணி நம்பிக்கை

(சென்னை)

எந்தப் பேச்சுவார்த்தையானாலும் தனித் தமிழீழம் என்கிற அடிப்படைக் கொள்கையின் படிதான் நடக்க வேண்டும் என்று அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் விடுத்தநிபந்தனைகளில் ஒன்று. இதிலிருந்து பிரபாகரன் மாறமாட்டார் என்றும். யாழ்ப்பாணத்துக்கு ஹெலிக்கொப்ரர்கள் அனுப்பி விசேடமாக திரு. பிரபாகரனை இந்திய அரசு அழைத்து வந்து பேச்சுவார்த்தை நடத்துவது எமக்கு ஒரு வெற்றிமையமாக அமைந்துள்ளது என்றும், ஜெயவர்த்தனாவின் யோசனையில் விடுதலைப் புலிகள் நிச்சயம் கவனமாக நடந்து கொள்வார்கள் என்றும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி வீரமணி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

# பிரேமதாசா எதிர்க்கிறார்

(சென்னை)

இனப் பிரச்சனை தீர்வுக்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தயாரித்துள்ள புதிய யோசனைகளை பிரதமர் பிரேமதாச எதிர்த்துள்ளார். இது சம்பந்தமாக அமைச்சர் காமினி ஜெயசூரியாவுடனும், வேறு பல அமைச்சர்களுடனும் பிரேமதாச ரகசிய ஆலோசனை நடாத்தியுள்ளார்.

வெளிநாடு சென்றிருந்த பிரேமதாசா ஜனாதிபதி அறிவித்த புதிய யோசனைகளை அறிந்தவுடன் அவசர அவசரமாக நாடு திரும்பினார்.

ஜெயவர்த்தனா தயாரித்துள்ள இந்த சமரசத்திட்டத்தின் அடிபபடையில் இரு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதன்படி இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள். இன்னொரு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திடுவார்கள்.

தான் தயாரித்துள்ள புதிய சமரசத்திட்டத்துக்கு ஆதரவு தர பாராளுமன்றம் மறுத்தால் உடனே பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதாக ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்

தன்னிடம் கருத்துக் கேட்காமல் ஜனாதிபதி முடிவெடுத்ததற்கு தான் எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்கமுடியாது என்று பிரதமர் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அந்த ஒப்பந்தத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும். அல்லாவிட்டால், ஒப்பந்தம் சட்டமாக முடியாது எனவே இந்த ஒப்பந்தத்தை தடைசெய்ய பிரதமர் ரகசிய நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் புதிய சமரசத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால் அதன் ஆதரவையும பெற பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

## ஆலயம் தீக்கிரை

(சிலாபம்)

சிங்கள மக்கள் சுற்றிவர குடியேற்றப்பட்டுள்ள உடப்பு கருங்காலிச் சோலை கல்யாணி சுப்பிரமனிய சுவாமி கோயில் தேவஸ்தானமும் ஆலயகுருக்களின் வீடும் அண்மையில் இரவு வேளையில் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. குருக்களின் இல்லம் முற்றாக தீக்கிரையானது.

# ''ஆயுதங்களை கீழே போடமாட்டோம்!''

(சென்னை)

''இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நிபந்தனைகளை ஏற்று எமது ஆயுதங்களை ஒப்படைக்கமாட்டோம்'' என்று விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

''எங்களுக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் ஒப்பந்தம் அமைந்தால்தான் நாம் ஆயுதங்களைக் கீழே போடுவது பற்றி பரிசீலிப்போம். ஜெயவர்த்தனா கேட்பதற்காக நாம் உடனேயே ஆயுதங்களை கீழே போடமாட்டோம்'' என்றும் பிரபாகரன் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 140ஆம் இலக்கத்திலுள்ள ஈழமுரசு அச்சகப்பிரிவில் 28-7-1987 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது தொலைபேசிஇல: 22347